கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# பரதநாட்டியம்

## புள்ளியிடும் திட்டம்



முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு** | 45 | T | I, II

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**புள்ளி வழங்கும் திட்டம்**

## பரத நாட்டியம் I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **3** | 11. | **4** | 21. | **2** | 31. | **1** |
| 02. | **1** | 12. | **1** | 22. | **3** | 32. | **4** |
| 03. | **4** | 13. | **1** | 23. | **1** | 33. | **2** |
| 04. | **2** | 14. | **3** | 24. | **4** | 34. | **1** |
| 05. | **4** | 15. | **1** | 25. | **3** | 35. | **3** |
| 06. | **2** | 16. | **4** | 26. | **1** | 36. | **4** |
| 07. | **3** | 17. | **1** | 27. | **2** | 37. | **1** |
| 08. | **1** | 18. | **2** | 28. | **4** | 38. | **2** |
| 09. | **3** | 19. | **3** | 29. | **2** | 39. | **3** |
| 10. | **2** | 20. | **4** | 30. | **3** | 40. | **4** |

(1X40=40 *புள்ளிகள்)*

## பரத நாட்டியம் II

1.

*1.* அலாரிப்பு, ஜதீஸ்வரம்

*2.* தசாவதாரம் - வாமண

நவக்கிரகம் - வெள்ளி

*3.* பிரகம்பிதா

*4.* சாத்விக அபிநயம்

*5.* அண்ணாவியார்

*6.* ஜம்பை தாளம்

*7.* சிலப்பதிகாரம்

*8.* தெய் திதி தெய்

*9.* கண்டிய நடனம்

*10* கரகம் *(12 புள்ளி)*

02.

*1. ஆதி* *( 1 புள்ளி)*

*2. கடகாமுகம், அலபத்மம்* *( 2 புள்ளி)*

*3. தித் ; தெய்; ந்த, தா ; தெய் ,; / தித் ; தெய் ; ந் த, / தா ; தெய்,; //*

*தித், தெய்ந்த தாதெய், தித்,*

*தெய்ந்த தாதெய்; /தித், தெய்ந்த தா தெய்,/ தித், தெய்ந்த தாதெய்,//*

*தித், தெய்ந்த தாதெய்,*

*தித், தெய்ந்த தாதெய்,*

*தித், தெய்ந்த தாதெய்,*

*தித் தெய்ந்த தாதெய்,/ தித், தெய்ந்த தாதெய்,*

*தித், தெய்ந்த தாதெய், / தித், தெய்ந்த தாதெய்,*

*தித் தெய்ந்த தாதெய், //*

*( 9 புள்ளி)*

***1. முஷ்டி ஹஸ்தம்***

*ஸ்திரே கஜக் கிரஹே தார்டியே வஸ்துவாதீனாம்ச தாரனே //*

*மல்லானாம் யுத்த பாவேபி முஷ்டி ஹஸ்தோய மிஷ்யதே //*

*ஸ்திரே - உறுதியான நிலை*

*கஜக் கிரஹே - தலை முடியைக் கோதி முடிதல்*

*தார்டியே - தைரியம்*

*வஸ்துவாதீனாம்ச தாரனே – மேலுள்ள பொருட்களைப் பிடித்தல்.*

*மல்லானாம் யுத்த பாவேபி - மல்லவர்களின் யுத்தம்*

*முஷ்டி ஹஸ்தோய மிஷ்யதே - இவை முஷ்டி ஹஸ்த விநியோகங்களாகும்.*

***2. கபோத ஹஸ்தம்***

*ப்ரணாமே குரு சம்பாஷே விநயாங்கீ க்ருதேஸ்வயம்.*

*கருத்து :*

*ப்ரணாமே - வணக்கம்*

*குரு சம்பாஷே - குருவுடன் பேசுதல்*

*விநயாங்கீ - விநயமாகப் பேசுதல்*

*க்ருதே ஸ்வயம் - மரியாதையுடன் ஏற்றுக்கொள்ளுதல்*

***3. உத்ஸங்க விநியோகம்***

*ஆலிங்கனேச்ச லஜ்ஜாயாம் அங்கதாதி ப்ரதர்ஷனே //*

*பாலானாம் ஷிசஷனே சாயம் உத்ஸங்கே யுஜ்யதே கரகே //*

*ஆலிங்கனே - அணைத்து*

*லஜ்ஜாயாம் - வெட்கம்*

*அங்காதி ப்ரதர்ஷனே – அங்கங்களைத் தொடுதல்*

*பாலானாம் ஷிசஷனே - சிறிய பிள்ளைகளுக்குக் கற்பித்தல் தாலாட்டு*

DRAFT

4. **முகுள ஹஸ்த விநியோகம்**


குமுதே போஜனே பஞ்சபானே முத்ராதி தாரணே //

நாபௌச கதலி புஷ்பே யுஜ்யதே முகுளஹ் கரஹ //

| | | |
|---|---|---|
| குமுதே | - | நீலோற்பலம் பூ |
| போஜனே | - | உணவு உண்ணுதல் |
| பஞ்சபாணே | - | ஐந்து பாணங்கள் |
| முத்ராதி | - | முத்திரை தரித்தல் |
| நாபௌச | - | தொப்புள் |
| கதலிபுஷ்பம் | - | வாழைப்பூ |

*1.* மிருதங்கம்

*2.*




*3.* அ. கலைஞர்கள்

நாரயண சாமி அப்பா

தஞ்சாவூர் வைத்தியநாத அய்யர்

புதுக்கோட்டை மான் பூண்டியாப்பிள்ளை

பாலக்காடு மணிஅய்யர்

பழனி சுப்பிரமணியபிள்ளை

ஆ. வகைகள்

தக்கு ஸ்தாயி மிருதங்கம்

ஹெச்சுஸ்தாயி மிருதங்கம்

இ. அமைப்பு பற்றி விளக்கம்.

- பலா கருங்காலி, செம்மரம், வேம்பு, வாதுமை போன்ற மரங்களால் செய்யப்படுகிறது.
- இதன் நடுப்பாகம் பருத்தும், மற்ற இரு புறமும் சிறுத்தும் காணப்படும்
- *23* அங்குலம் முதல் *27* அங்குல நீளத்தில் இருக்ககும் உட்பகுதி *11* அங்குல விட்ட அளவில் குடைந்தெடுத்து செய்யப்படுகிறது.
- இடதுபக்க விளிம்பில் உள் விட்டம் *8* அங்குலத்திலும் வலது பக்க விளிம்பில் உள்விட்டம் *7* அங்குலத்திலும் செய்யப்படுகிறது.
- இருபக்கமும் தோலால் மூடப்பட்டு இரண்டு தோல்களிலும் பக்கத்திற்கு *16* துளைகள் இட்டு எருமைத் தோல் வாரினால் கோர்த்து இணைத்துக் கட்டப்பட்டிருக்கும்.

DRAFT

- வார்களை இழுத்து இறுக்கிச் சுருதி சேர்ப்பதற்காக வார்களுக்கும் மிருதங்கக் கட்டைகும் இடையில் சிறு சிறு மரத்துண்டுகள் செருக்கப்பட்டிருக்கும்.
- வலந்தலை 3 அடுக்கு தோல்களால் மூடப்பட்டிருக்கும் இதன் உட்கரைத்தட்டு கண்ணுக்கு தெரியாத வகையில் பெண் ஆட்டுத்தோலால் மூடப்பட்டிருக்கும்.
- இதற்கு அடுத்து மற்றொரு தோல் மூடப்பட்டிருக்கும். இந்த நடுத்தோல் கொட்டுத்தட்டு அன்றேல் சாப்புத்தோல் என்று சொல்லப்படும் இது பெண் ஆட்டின் முன்பக்க தோலால் ஆனது.
- இதன் நடுவில் மங்கனீசுப்பொடி, சோற்றுப் பருக்கை புளியஞ்சோறு போன்றவைகளால் கலந்த கலவைச் சோறு அதாவது கரணை என்று சொல்லப்படும்.
- மூன்றாவது மேல் அடுக்குதோல் கன்றுக் குட்டியின் தோலால் ஆனது. இதனை வெட்டுத்தோல் அல்லது மீட்டுத் தோல் என்ற சொல்லப்படும்.
- வலந்தலை பகுதி ஆதார சட்சமத்திற்கு சுருதி சேர்க்கப்படுகிறது.
- இடந்தலை இரண்டு அடுக்கு தோலால் மூடப்பட்டிருக்கும். உள் அடுக்கு ஆட்டுத் தோலாலும் மேல் அடுக்குத் தோல் எருமைத் தோலாலும் மூடப்பட்டருக்கும்.
- தோலின் மையத்தில் நல்ல நாத வெளிப்பாட்டிற்காக ரவை தண்ணீருடன் கலந்து பிசைந்து தடவப்படும் இந்த நிலைக்கு ‘சுஜி’ என்று பெயர்.
- இடந்தலை தோல் பகுதி தொப்பி என்று சொல்லப்படும்.
- இதில் வலந்தலையில் பேசும் சுருதிக்கு இணையா கீழ்ச் சுருதிக்கு சுருதி சேர்க்கப்படும்.

5. சிறு குறிப்பு

**1. பஞ்ச பாணம்.**

- பஞ்சபாணம் என்னும் வடமொழிச் சொல்லின் கருத்து. பஞ்ச என்பது ஐந்து பாணம் என கூறப்படுகிறது.
- ஐந்து வகையான அம்புகள் என்பதாகும் இவை தாமரை, அசோகம், சூதம் ( மா), முல்லை, நீலோற்பலம், ஆகிய மலர்களால் ஆக்கப்பட்டு மனிதர்களுக்கு மன்மதனால் ஏவப்படுபவை.
- மன்மதனை காதல் தெய்வம் என புராணங்கள் வர்ணக்கிறது.
- மன்மதனை அபிநயிக்கும் பொழுது இடது கையில் சிகரமுத்திரையும், வலது கையில் கடகாமுக முத்திரையும பிடித்துக் காட்டுவார்.
- சிகர முத்திரை வில்லையும், கடகாமுக முத்திரை மலர் அம்பினை குறிப்பதாக கூறப்படுகிறது.
- மன்மதனின் மறு பெயர்கள் அனங்கன், மாறன், மதனன், மதனவேள், காமன், பஞ்சபாணன் என்பனவாகும்.
- மன் மதனின் மலர்க்கணையால் தாக்கப்பட்டவர்கள் காதல் வயப்படுகின்றனர்.
- தாமரை இந்த பாணத்தால் தாக்குண்டவர்களுக்கு காம நினைவுகள் ஏற்படும்.
- அசோகம் இந்த அம்பினால் தாக்குண்டவர்கள் தமது ஆசை பூர்த்தியாகும் வரையில் உணவை வெறுப்பார்.
- சூதம் (மா) இந்த பாணத்தால் தாக்குண்ட காதலருக்கு பசலை உண்டாகும். வெட்கத்தால் பச்சை நரம்போடச் செய்யும்.
- முல்லை இந்த பாணத்தால் தாக்குண்டவர்களுக்கு மனவருத்தம், சோகம், உண்டாகும்.
- நீலோற்பலம் இந்த அம்பினால் தாக்குண்டவர்களின் ஆசை உடனே நிறைவேறாவிட்டால் மரணம் அன்றேல் மரணமூர்ச்சை உண்டாகும்.

**2. தீர்மாணம்.**

- பரதநாட்டியத்தின் நுட்பமான முடிவே தீர்மானம் ஆகும்.
- சொற்கட்டினால் லயத்தோடு கலந்த முடிவுத் துண்டுகளே தீர்மானம்.
- இது ஜதிகளினால் ஆக்கப்பட்டது.
- சிக்கலானதும், அழகானதும் உறுதியானதும் ஆகும்.
- இது கூடுதலாக லயப்பிடிப்புடன் இருக்க வேண்டும்.
- உருப்படி அங்கங்களை முடிப்பதற்கு எடுத்துக் காட்டாக அமையும் பகுதியாகும்.
- சிக்கலான அடவு தாள ஜதி முதலியவற்றால் தொகுக்கப்பட்ட சொற்கட்டு மாலையே தீர்மானம் ஆகும்.
- அடவுகள் சுருக்கமாகவும், லயப்பிடிப்புடனும் பிரகாசம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும்.
- தீர்மானம் சிறிதாக அல்லது பெரிதாக இருக்கலாம்.
- தீர்மானம் விளம்ப காலத்தில் ஆரம்பித்து மத்திம காலத்தை அடைந்து துரித காலத்தில் முடிவடையும்.
- மிருதங்க சொற்கட்டுகளுடன் கூடிய ஜதிகளைக் கொண்டு மகுட அடவுகளுடன் முடிவுறும் கோர்வைகளும் தீர்மானம் எனப்படும்.
- இது பாட்டு அல்லது நடனத்தின் முடிவிலோ அல்லது பகுதிகளின் இடையிலோ வரும்
- தீர்மானம் இன்றி கோர்வை முடிவடைவதில்லை
- தீர்மானம் 'ததிங்கிணதொம்' 'கிடதக தரிகிட தொம்' என்னும் மிருதங்க சொற்கட்டுடன் முடிவடையும் இதனையே மிருதங்கத்தில் "மோரா" என்று கூறுவர்.

**3. கொழுந்து நடனம்.**

- கொழுந்து நடனமானது தேயிலைக் கொழுந்தினைக் கொய்து கூடையிற் போட்டு அதைப் பக்குவமாகத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்வதைச் சித்தரித்து ஆடிக் காட்டப்படுகிறது.
- இதற்கான பாடல் மலையகப் புகழ் மிக்கதும் தேயிலை கொய்யும் பெண்களின் அன்றாட வாழ்க்கையையும் அவர்களின் கஸ்ட நஸ்டங்களையும் மையமாக வைத்து இயற்றப் பட்டதாகவும் இருக்கும்.
- பெண்கள் சாதாரண புடவை உடுத்தி இடையில் கம்பாயம் ஒன்று கட்டி தலையில் கோன் ( சாக்கு அல்லது உரைப்பை) அணிந்து முதுகில் பிரம்பினால் பின்னப்பட்ட கூடையும் கையில் நீண்ட மூங்கில் குச்சியையும் வைத்திருப்பார்.
- கைநிறைய இறப்பர் வளையல்களை அணிந்தும் கழுத்தில் முத்து மாலைகள் அணிந்தும் மூக்கில் மூக்குத்தி, நத்து என்பன மாட்டியும் காதில் சிமிக்கி, தோடு என்பன அணிந்தும் காலில் மெட்டி, காற் சங்கலி என்பன அணிந்தும் ஆடுவார்கள்.
- இந் நடனத்தில் கங்காணிமார் என்னும் பாத்திரத்தையும் சித்தரிப்பார்கள்.
- பாடல்கள் அவர்களது வாழ்வியல் துன்பங்களைப் பிரதிபலிப்பதாகவும், கங்காணிமார், கணக்குப்பிள்ளை, தோட்டத்துரைமார் ஆகியோரின் பாலியல் சேட்டைகளை கிண்டல் செய்வதாகவம் அமையும்.
- இந் நடனத்திற்கு தப்பு வாத்தியம் முக்கியம் பெறும்.

1. காவடி, கரகம்

2. கும்மி, கோலாட்டம்

(நேர்த்திக்காக ஒன்று, மகிழ்ச்சிக்காக ஒன்றும் எழுதினால் போதும்.)

**3. காவடி**

- முருகப்பெருமானை வேண்டி தங்கள் காணிக்கைகளைச் செலுத்தும் முகமாக பக்தர்களின் பழக்கத்தில் இருந்து தோன்றியதே காவடி ஆகும்.
- காவடிகள் பல்லக்குப் போல் சிறிய வடிவில் அமைக்கப்பட்டு அதன் இரு மருங்கிலும் மயில் இறகு கற்றைகள் செருக்கப்பட்டு நடுத்துண்டு பட்டாலும் மணிகளாலும் அழகு செய்யப்படும்.
- காவடியினைத் தோளில் தூக்கி வைத்து இசைக்கும் தாளத்திற்கு ஏற்ப ஆடுவார்.
- இந் நடனத்திற்கு தவில், நாதஸ்வரம், நையாண்டி மேளம், பறை போன்ற வாத்தியங்கள் பயன்படும்.
- காவடிச்சிந்து என்ற சிந்துக்கவி இந் ஆட்டத்தின் இசைக்குரியது.
- காவடிகள் பலவகைப்படும் அவை பாற் காவடி. பன்னீர்க்காவடி, புஸ்பக்காவடி, சந்தனக் காவடி, பறவைக் காவடி, துலாக் காவடி, தூக்குக் காவடி போன்றவை.
- காவடி நடனத்தின் பாடல்கள் முருகனின் புகழ் பாடுதலையே நோக்கமாக கொண்டிருக்கும்.
- காவடி என்பது காவு தடி எனும் சொல்லில் இருந்து வந்தது. காவுதடி என்பது ஒரு தடி அதாவது இரு முனைகளிலும் காணிக்கைப் பொருட்களைக் கட்டித் தொங்க விட்டவாறு தோளில் தாங்கி இலகுவாகச் சுமந்து செல்வதற்குப் பயன்படும் தடி. அதுவே பிற்காலத்தில் அலங்கரிக்கப்பட்டதாகவும் சிறியதாகவும் மாற்றப்பட்டு இன்றைய காவடி உருவானதாகக் கருதப்படும்.
- பெரும்பாலும் ஆண்களால் ஆடப்படும். பெண்கள் ஆண்வேடம் தரித்து இன்நடனம் ஆடுவார்கள்.

**கரகம்**

- கிராமிய மக்கள் நேர்த்திக்கடனுக்காக மாரியம்மானை வேண்டியாடும கிராமிய நடனம் கரகம் ஆகும்.
- சக்திக் கரகம், ஆட்டக் கரகம் என்ற இரண்டு வகை உண்டு.
- கோயில் வழிபாடுகளின் போதும் தெய்வ வழிபாட்டின் போதும் ஆடப்படுவது சக்திக் கரகம் ஆகும்.
- கரகம் தலையில் சுமந்து சமநிலை பேணி ஆடப்படும் நடனம் ஆகும்.
- இந் நடனத்தை குடக்கூத்து எனவும் அழைப்பர்.
- மக்கள் பஞ்சம் வந்த போதும், கொள்ளை நோய்கள் வந்து மக்கள் துன்பப்படும் போது இக்கரக நடனத்தை ஆடி வழபாடு நிகழ்த்துவார்கள்.
- பொதுவாக ஆண்களால் ஆடப்படும் கரகம் பிற்கால்தில் பெண்களாலும் ஆடப்படுகிறது.
- நாதஸ்வரம், ஒத்து, தவில், உடுக்கு போன்ற வாத்திய இசைக்கு ஏற்ப கரகம் ஆடுபவர்களும், இசைக் கலைஞர்களும் தங்களை மறந்து உச்சக்கட்ட உணர்ச்சிசி சூழலில் மிகவும் விறுவிறுப்புடன் ஆடி ஆடி திடீரென ஒரு கட்டத்தில் நிறுத்தி விடுவர்.
- ஆட்டக்கரகம் ஆடுபவர்கள் பெண்கள் பிஜாமாவும், மேற்சட்டையும், ஆண்கள் பிஜாமா அல்லது தாருபாச்சி அனிந்து ஆடுவார்கள்.
- கோயில்களில் ஆடப்படும் கரகம் சேலை அணிந்து பக்தி பூர்வமாக ஆடப்படும்.

DRAFT

- மாரி அம்மன் என்றால் கரகம், என்பது போல கரகம் என்றால் மாரியம்மன் என கருத்து வழக்கிலுள்ளது.
- உடுக்கை , வேப்பிலை சிவப்பு மஞ்சள் ஆடை, குங்குமம் திலகம், தேங்காய், அலகு, சலங்கை என்பன கரகத்திற்கு இன்றி அமையாதன.

**கோலாட்டம்**

- இது பெண்களாலும் ஆண்களாலும் ஆடப்படும கிராமிய நடனமாகும்.
- நடுத்தர வகுப்பினரிடையே பெருவழக்கில் இருக்கும் ஆடல் வகையாகும்.
- கோல்கள் கொண்டு ஆடப்படுவதனால் கோலாட்டம் எனப்படுகிறது.
- கோல்கள் 8-10 அங்குல நீளம் கொண்டதாகக் காணப்படும்.
- கோல்களைத் தட்டியபடி, பல கோலங்களில் அமைத்து ஆடுவர்.
- ஒரு குழுவில் எத்தனை பேரும் பங்குபற்றலாம்.
- சமூக நிகழ்ச்சிகள், ஆலய விழாக்களில் இந் நடனம் ஆடப்படும்.
- பின்னல் கோலாட்டம் என்ற ஒரு வகை உண்டு.
- ஆண்கள் தாறுபாச்சியும் பெண்கள் ஜரிகைப் பாவாடை, சட்டை, சேலை அணிந்தும் முத்துமாலை, வளையல் போன்ற ஆபரணங்களை அணிந்தும் கால்களில் தண்டைகளை அணிந்தும் ஆடுவார்கள்.
- டொல்ஹி, ஹார்மோனியம் போன்ற பக்கவாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**கும்மி**

- சமூக நடனங்களில் பெண்கள் மகிழ்சியுடன் பங்கேற்கும் நடனம் கும்மி ஆகும்.
- பெண்கள் யாவரும் கூடி வயது வேறுபாடின்றி குழுக்களாகப் பிரிந்து குத்து விளக்கு அல்லது நவ-தானிய முளைப்பாரி அல்லது தேவதையின் படத்தின் முன்னால் பாடிக்கொண்டு ஆடுவார்கள்.
- கையொலி எழுப்பும் போது தங்கள் கைகளைத் தட்டுவதோடு தோழியின் கைகளையும் தட்டுவார்கள்.
- கைத்தட்டுதலில் விரல் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித்தட்டு என பல வகை உண்டு.
- மேலும், கீழும் இடமும் வலமும் இடையுமாக எழுப்பும் கையொலிகள் பாத ஒலிகளுடன் இணைந்து ஒலித்துக் கவர்ச்சியாக அமையும்.
- இதற்கு அணியும் ஆடை ஆபரணங்கள் சாதராண ஜரிகை பாவாடை, சட்டை, தாவணியுடன் முத்துமாலை, வளையல் ஒட்டியாணம் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- கும்மி தற்போது நாட்டிய நிகழ்சிகளிலும் மேடை நிகழ்ச்சிகளிலும் பின்னிப் பிணைந்து வளர்க்கப்பட்டுள்ளது.

**7.**

- இசை உலகில் பெயர் பெற்ற, சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய தஞ்சை நால்வரின் மரபில் வந்தவர் இசை விற்பன்னர் க.பொன்னையாப் பிள்ளளையாவார்.
- சர்வஜித்து 1888ம் ஆண்டு தை மாதம் 2 ஆந் திகதி பந்தணை நல்லூர் என்ற ஊரில் பிறந்தார்.
- வித்துவான் கண்ணுச்சாமி பிள்ளையவர்களுக்கு மகனாக பிறந்தார்.
- மாமனாகிய நல்லூர் நாட்டியக் கலாநிதி வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் 15 ஆண்டுகள் தங்கியிருந்து இசை, நாட்டியம், மிருதங்கம் ஆகிய கலைகளை நன்கு கற்றதோடு தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார்.

- நாட்டிய வித்துவான் நல்லையாப் பிள்ளை இவருடைய திறமையைச் கண்டு வியந்து இவரைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள சிறந்த சங்கீத வித்துவான் முன்பு பொன்னையா பிள்ளையை பாடச் செய்தார்.
- இதன் விளைவாகப் பொன்னையா பிள்ளையவர்களுக்கு பெரும் புகழ் உண்டாயிற்று.
- பாலக்காடு அனந்தராம பாகவதரின் நன்மதிப்பைப் பெற்று அவரிடமே ஆறு மாதங்கள் பயின்றார்.
- நாட்டியக் கச்சேரிகளுக்கு தன் மாமன் மீனாட்சி சுந்தரம்பிள்ளையோடு அடிக்கடி செல்வது உண்டு.
- நாட்டியக் கச்சேரியில் இவருடைய பாட்டைக் கேட்ட பலரும் குரலிசையரங்கு நிகழ்த்துவதற்கு மிகச் சிறந்தவர் எனக் கூறினார்.
- அனறு முதல் நாட்டிய அரங்கு நிகழ்சிகளோடு குரலிசையரங்கு நிகழ்ச்சிகளும் இவர் நடாத்தி வந்தார்.

- மிருதங்கம் வாசிக்க கற்றுக் கொண்டதுமல்லாமல் பிறருக்கு நன்கு கற்றுக் கொடுக்கும் ஆற்றலும் பெற்றார்.
- தஞ்சை மிருதங்க வித்துவான் வைத்திய நாதையர் அவர்களுக்கு முதன் முதலில் மிருதங்கம் கற்றுக் கொடுதது இவராவர்.
- தஞ்சை பெருங்கோயிலில் பிள்ளையவர்களும் சித்திரைத் திருவிழாவில் நடைபெறும் குறவஞ்சி நாடகத்தைச் சிறந்த முறையில் நடாத்திக் காட்டினார்.
- பொன்னையா பிள்ளையின் தந்ததை 40 வயது நடக்கும் போது காலமானார் தந்தையாரிடத்தில் கற்று வந்த மாணவ மாணவியர்க்கு தொடர்ந்து பிள்ளையவர்கள் இசை, நாட்டிம், மிருதங்கம் கற்றுவர ஆரம்பித்தார்.
- அண்ணாமலையில் ஆரம்பிக்கப்பட்ட இசை கல்லூரியில் பொன்னையாப்பிள்ளை அவர் தொடக்திலேயே இசை ஆசிரியராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- குரலிசை வகுப்பையும், மிருதங்க வகுப்பையும் தாமே நாடாத்தி வந்தார்.
- பல ஜதிஸ்வரங்களும், தானவர்ணங்களும் கீர்த்தனைகளும் தில்லானாக்களும் இயற்றி மாணவ மாணவியருக்கு போதித்து வந்தார்.
- சென்னை பல்கலைக் கழகத்திலும் சென்னை சங்கீத வித்துவ சபையிலும் முக்கிய உறுப்பினராக இருந்து பல பாடத்திட்டங்களை இவர் வகுத்துக் கொடுத்தார்.
- தேர்வு அதிகாரியாகவும் பணியாற்றினார்.
- கோடை விடுமுறைக் காலங்களில் யாழ்ப்பாணம் வந்து கோடை இசைப்பள்ளி நடாத்தி தொண்டு செய்தார்.
- அண்ணாமலை இசைக்கல்லூரியின் பாடத்திட்டத்திற்கேற்பச் செயல்முறை இசை நூல் ஒன்றை எழுதி 750ஃஸ்ரீ பரிசு பெற்றார்.
- இசை இலக்கண நூல் ஒன்றை இல்லாத குறையை அறிந்த பிள்ளையவர்கள் இசை இயல் என்ற இசை இலக்கண நூல் ஒன்றையும் எழுதி அதை கற்பித்து வந்தார்.
- 1932 ம் ஆண்டு சென்னைச் சங்கீத வித்துவ சபை நடாத்திய இசை விழாவிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று விழாவை நன்கு நடாத்திக் கொடுத்து சங்கீத கலாநிதி என்ற பட்டத்தை பெற்றார்.
- சென்னை பல்கலைக்கழகத்தில் ஐந்து ஆண்டுகள் இந்திய இசை டிப்ளோமா வகுப்புகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.
- முன்னோர்களின் சாகித்தியங்களைத் தொகுத்து ஸ்வரதாளக் குறிப்புடன் ‘ தஞ்சை பெருவுடையான் பேரிசை’ என்ற பெயரால் ஓர் அரிய நூலை வெளியிட்டார்.

- *அண்ணாமலைப் பல்கழைக்கழக இசைக் கல்லூாயில் முழுமையும் தமிழ்ப்பாடல்களாகவே நடத்த வேண்டுமென்ற ராஜாசேர் அண்ணா மலைச் செட்டியாரின் விருப்பத்திற்காக மாதம் 100 சம்பளம் பெற்று ஆரம்பப் பாடங்களுக்கு வேண்டிய இசைப்பகுதியைத் தயாரித்தார்.*
- *1947 ம் ஆண்டில் தமிழிசை மகாநாட்டிற்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.*
- *1941, 1942 ஆண்டுகளில் எழுதிய பாடல்கள் அனைத்தும்  தமிழிசைக் கருவூலம் எனும் நூலாக 1949 ம் ஆண்டில் க.பொ. கிருஷ்ணமூர்த்தி, க.பொ. சிவானந்தம் ஆகியோரால் வெளியிடப்பட்டது*
- *1945 ம் ஆண்டு ஜூ**ன்** திங்கள் 30 ம் நாள் தமது 57 ஆவது வயதில் இறைவனடி அடைந்தார்.*

DRAFT